மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், யா.ஒத்தக்கடை ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை:திருமதி.S.முருகேஸ்வரி சரவணன்

ந.க.எண்:2/2023-2024

நாள்: 28.07.2023

பொருள்:மதுரை மாவட்டம் – மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் - யா.ஒத்தக்கடைஊராட்சி கொடிக்குளம் பிட்-I கிராமம் சர்வே எண்கள் 149/1C1A -ல் 0.585 ஏக்கர் (2382.00 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவு ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி வடிவமைப்பிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியது – மனைப்பிரிவுக்கு உத்தரவிடுதல் - சார்பு.

பார்வை:1)அரசாணை எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:04.05.2017 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.125, பாகம் -III பிரிவு 1(a), நாள்:04.05.2017

2)அரசாணை எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:13.10.2017

3)உறுப்பினர் செயலர்(பொ), மதுரை உள்ளூர் திட்டக் குழுமம், மாநகராட்சி அலுவலக வளாகம்,அண்ணாமாளிகை அவர்களின் நடவடிக்கைகள் ROC No.9990/2023/SWP/ MVMVCXS1 /2023/ TCP Date:15/07/2023

4) திரு.P.சரவணன் மற்றும் 5 நபர்கள் அவர்களின் விண்ணப்பம், நாள்:

உத்தரவு:-

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட யா.ஒத்தக்கடை ஊராட்சி - கொடிக்குளம் பிட்-I கிராமம் சர்வே எண்கள்: 149/1C1A -ல் 0.585 ஏக்கர் (2382.00ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவு மற்றும் திட்ட அனுமதி வடிவமைப்பிற்கு கொள்கையளவிலான மனைப்பிரிவு வரைபடத்திற்கு (in principally accepted layout frame) ம.வ./ம.உ.தி.கு எண்: 252/2023 திட்ட அனுமதி எண்:255/2023 என எண்ணிட்டு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் திரு.P.சரவணன் மற்றும் 5 நபர்கள் அவர்களுக்கு பார்வை-3ல் காணும் கடிதம் மூலம் உள்ளூர் திட்டக்குழுமம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

வளர்ச்சிக்கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் உள்ளாட்சியின் தனிக்கணக்கில் செலுத்தப்பட்ட பின்னரே இம்மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவுகளுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என பார்வை 3ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

Scanned with CamScanner

பார்வை 3-ல் காணும் கடிதத்துடன் கீழ்க்காணும் விபரப்படி வளர்ச்சிக்கட்டணம் செலுத்தப்பட்டதற்கான செலுத்துச்சீட்டு இணைத்து வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | கட்டண விபரம் / இடத்தின் மொத்த அளவு(ச.மீ) | ஒரு சதுர மீட்டருக்கு ரூ. | செலுத்த வேண்டிய தொகை ரூ. | செலுத்தப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | மனைப்பிரிவு மேம்பாட்டு கட்டணம் 1983 ச.மீ | 25 | 49575 | 49575 |

மேற்கண்டவாறு மேம்பாட்டுக்கட்டணம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்கி இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது. (1 முதல் 12 வரையிலான மனைப்பிரிவுகளுக்கு மட்டும்)

உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சொத்துக்கள் விபரப் பட்டியல்

1.சாலை மொத்த பரப்பு = 398 ச.மீ

2.உள்ளாட்சி அமைப்பு = 10.97 ச.மீ

**நிபந்தனைகள்**

1.இம்மனைப்பிரிவில் அமையும் பூங்காவிற்கான கட்டணம் அரசாங்க உத்தரவின்படி பணமாக செலுத்தப்பட்டுள்ளது.

2.நிலஉரிமம் குறித்துறுதி செய்யும் பொறுப்பு உள்ளாட்சியையே சார்ந்ததாகும்.

3.கொள்கை அளவிலான ஒப்புதல் அளிப்பதன் மூலம் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை.கொள்கை அளவில் ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு பெறப்பட்ட நில உரிமை ஆவணங்களின் அடிப்படையில் அரசாணையின் படி மனைப்பிரிவு வரைபடம் தயார் செய்து கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்க வழிவகை உள்ளதா என்று மட்டுமே பார்க்கப்படுகிறது.சொத்தினை பரிமாற விரும்பும் எந்த நபரும் சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதி செய்து கொள்ள வேண்டும். அதன் மீது வேறு எவரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான நீதிமன்றத்தின் முன் தீர்க்கப்படலாம், நில உரிமை குறித்து முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை மற்றும் உள்ளாட்சித் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

4.இந்த மனைப்பரிவு அமையும் நிலத்தின் மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நிலம கையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்பப்படவில்லை எனவும் ,நிலமானது தமிழ்நாடு நகரப்புற நில உச்சவரம்பு சட்டம் மற்றும் நில சீர்திருத்த சட்டங்களின் கீழ் கவரப்படவில்லை எனவும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

5.இந்த வரன்முறை மனைப்பிரிவுகளுக்கு மட்டுமே பொருந்தும், மனையில் அமையும் கட்டிடத்திற்கு வரன்முறையாகக் கருதப்பட மாட்டாது.

Scanned with CamScanner

6.உள்ளூர் திட்டக் குழும அலுவலகத்தில் அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளாட்சி அமைப்பு ஒப்புதலின்றி மாற்றம் செய்யக்கூடாது.

7.நகர் ஊரமைப்புத் துறை கொள்கை அளவிலான (in principle)ஒப்புதல் அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை,அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறையோ உள்ளாட்சி துறையோ பொருத்தமான அமைப்பு அல்ல.

தலைவர்
யா. ஒத்தக்கடை ஊராட்சி

பெறுநர்:

திரு. P.சரவணன்,
4/233,சுதந்திர நகர் 3வது தெரு,
யா.ஒத்தக்கடை,
மதுரை-625 107.

**நகல்:**

உயர்திரு.வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள்(கி.ஊ).,
மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம்,
மதுரை.

Scanned with CamScanner